DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**O.S.No. 409**/2023 PW-1

Name : Muniyammal W/o Surendiran Age -

Father's Name : Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 23.07.2025

குறுக்கு விசாரணை

நான் 8ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு தமிழ்தான் தெரியும், ஆங்கிலம் தெரியாது. நான் சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தம்பிமீதுதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தம்பி பிள்ளைகள் மீதும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவாவிலும் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலும் என்ன குறிப்பிட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்து வெள்ளியூரில் உள்ளது. அது மொத்தம் 6 ஏக்கர் ஆகும். அதன் சர்வே எண் எனக்குத் தெரியாது. தாவா சொத்தின் ஜக்குபந்தி எனக்குத் தெரியாது. என் தாத்தாவின் சொத்தின்மீதுதான் நான் பாகம் கேட்கிறேன். அவர் பெயர் ஜெயராம செட்டியார், அவர்மனைவியின் பெயர் ரோஸ் செட்டியார். என் தாத்தாவிற்கு எவ்வாறு அந்த சொத்து வந்தது எனக்குத் தெரியாது என் தந்தைக்கு எவ்வாறு அந்த சொத்து பாத்தியப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது. தாவா சொத்து 1965ல் பாகம் வந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்குண்டான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை இறந்து 30 வருடமாகிறது. என் தாயார் இறந்து 15 வருடங்கள் ஆகின்றது. எனக்கு தற்போது 57 வயதாகிறது. எந்த தேதியில் எனக்கு திருமணம் நடைபெற்றது என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு 21.8.1983ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கு திருத்தணி அருகே உள்ள ஆற்காடு குப்பத்தில் திருமணம் செய்துவைத்தார்கள். தற்போதும் நான் அங்குதான் வசித்துவருகிறேன் எனக்கு திருமணமாக 42 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டா சிட்டா அடங்கல் ஆகிய அனைத்து ஆவணங்களும் என் தம்பி பெயரில் மாறியுள்ளது என்றால், அவர்தான் அதை மாற்றியுள்ளார். 2019ல் சென்னை அவுட்டர் ரிங் ரோட்டிற்காக தாவா சொத்தின்

ஒரு பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு அரசாங்கம் நஷ்ட ஈடு தொகை வழங்கியது அந்த தொகையை எனது தம்பி முனுசாமிதான் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். தாவா சொத்தில் கூடுதலாக சுவாதீனம் இருப்பதாக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனது சகோதரர்தான் அதில் பயிர் செய்கிறார். தாவா சொத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்த தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான். நான் செட்டில்மெண்ட் ரத்து செய்யக்கோரி கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.